# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி www.tnlbo.tn.gov.in

**முன்னிலை : திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப. (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண்: 85/மா/2025**

**நாள்:24.12.2025**

ஜெ. பிரவீன் குமார்
சென்னை --- முறையீட்டு மனுதாரர்

ஆணையர்,
தாம்பரம் மாநகராட்சி --- எதிர்மனுதாரர்

சென்னை, குரோம்பேட்டை, மும்மூர்த்தி நகர், 5வது தெரு, கதவு எண் 12/94 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. ஜெ.பிரவீன் குமார் என்பவரின் 04.01.2025 நாளிடப்பட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 06.01.2025 அன்று பெறப்பட்டு 85/மா/2025, என எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

சென்னை, குரோம்பேட்டை, மும்மூர்த்தி நகர், 5வது தெரு, கதவு எண் 12/94 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. ஜெ. பிரவீன் குமார் என்பவர் தனது 04.01.2025 நாளிட்ட மனுவில் பின்வரும் புகார்களை தெரிவித்துள்ளார்:–

> “செங்கல்பட்டு மாவட்டம், தாம்பரம் மாநகராட்சி, மண்டலம் –2, வார்டு 28–ல் அமைந்திருக்கும் மும்மூர்த்தி நகர் 5–வது மற்றும் 4–வது தெருக்களில் சுமார் 15 வருடங்களுக்கு முன்பாக மழைநீர் வடிய, மழைநீர் வடிகால்வாய் அப்போதைய பல்லாவரம் நகராட்சி சார்பில் அமைக்கப்பட்டதாக, தாம்பரம் மாநகராட்சி, மண்டலம் 2–ன் பொது தகவல் அலுவலர் ந.க. எண் 3662/2024.இ1 நாள் 01.10.2024 கடிதத்தின் வழி மும்மூர்த்தி நகர் வீட்டு உரிமையாளர்கள் சங்கத்திற்கு தகவல் வழங்கியிருக்கிறார்.
>
> 2. மழைநீர் வடிய மழைநீர் வடிகால்வாயாக கட்டப்பட்ட இந்த கால்வாய் குறித்த விழிப்புணர்ச்சியையும், இந்த கால்வாயில் கழிவுகளை கொட்டக் கூடாது என்கிற விழிப்புணர்ச்சியையும் அப்போதைய பல்லாவரம் நகராட்சியும் சரி, இப்போது தாம்பரம் மாநகராட்சியும் சரி மேற்கொள்ளவேயில்லை.
>
> 3. மேலும் மழைநீர் வடிய கட்டப்பட்ட இந்த கால்வாயில் கழிவுகள் கலந்திடாபடி இந்த கால்வாயை மூடிப்போட்டு மூடும் பணியையும் அப்போதைய பல்லாவரம் நகராட்சியும் இப்போது தாம்பரம் மாநகராட்சியும் செய்திடவேயில்லை.

4. மழைநீர் வடிய கட்டப்பட்ட இந்த மழைநீர் வடிகால்வாயை மும்மூர்த்தி நகர் 5–வது மற்றும் 4–வது தெரு பொதுமக்கள் கழிவுநீர் கால்வாய் என்று நினைத்து இதில் வீட்டின் கழிவுகளை கொட்டி இதை கழிவு நீர் கால்வாயாக பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்கள்.

5. இதன் விளைவாக மும்மூர்த்தி நகர் 5–வது மற்றும் 4–வது தெருக்களில் கொசுத் தொல்லை கட்டுக்கடங்காமல் அதிகரித்து பொது மக்களுக்கு பெரும் இன்னல்களை விளைவித்து வருகிறது.

6. மேலும் மூடப்படாமல் திறந்திருக்கும் மழைநீர் வடிகால்வாயில் கொட்டப்படும் உணவு கழிவுகள் எலிகளின் பெருக்கத்திற்கும் காரணமாக மாறி எலிகளின் தொல்லையும் மும்மூர்த்தி நகர் 5–வது மற்றும் 4–வது தெருக்களில் அதிகரித்து பொது மக்களுக்கு பெரும் இன்னல்களை ஏற்படுத்தி வருகிறது.

7. இது தொடர்பில் பலமுறை தாம்பரம் மாநகராட்சி அலுவலகத்திலும் தாம்பரம் மாநகராட்சி மண்டலம்–2 அலுவலகத்திலும் புகார் அளித்தும் எவ்வித நடவடிக்கையும் உரிய மாநகராட்சி அதிகாரிகளால் மேற்கொள்ளப்படவேயில்லை.

8. மும்மூர்த்தி நகர் வீட்டு உரிமையாளர்கள் சங்கம் சார்பில் மும்மூர்த்தி நகரில் அமைந்திருக்கும் மழைநீர் வடிகால்வாயை கழிவுநீர் கலந்திடாதபடி சுத்தம் செய்து சிமெண்ட் மூடிப்போட்டு மூடி பாதுகாத்திட வேண்டியது யாருடைய பொறுப்பு என்று தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005–ன் கீழ் தாம்பரம் மாநகராட்சி மண்டலம்–2 பொது தகவல் அலுவலரிடம் தகவல் கோரியிருந்தோம்.

9. மழைநீர் வடிய கட்டப்பட்ட கால்வாயை கழிவுநீர் கலந்திடாதபடி பாதுகாக்கும் வகையில் மூடிப்போட்டு தரவேண்டிய பொறுப்பு மாநகராட்சிக்கு இல்லை என்கிற பொறுப்பற்ற பதிலை வழங்கியிருக்கிறார் தாம்பரம் மாநகராட்சி மண்டலம்–2, பொது தகவல் அலுவலர் ந.க. எண் 3662/2024/இ1 நாள் 01.10.2024 கடிதத்தின் வழி கூறியிருக்கிறார்.

Tamil Nadu Urban Local Bodies Rules, 2023
பிரிவு 385–ன்படி
கொசுத் தொல்லை மற்றும் எலித் தொல்லையை கட்டுப்படுத்துவதும், கொசுத் தொல்லை மற்றும் எலித் தொல்லை ஏற்படுத்தும் காரணிகளை முற்றிலும் களைவதும் மாநகராட்சியின் கடமையாகும்.

மேலும்,

Tamil Nadu Public Health Act 1939
பிரிவு 41

(1) any premises in such a state as to be prejudicial to health or a nuisance.

(2) any pond, pool, ditch, gutter, water-course, water-trough, latrine, cesspool, drain or ashpit which is so foul or in such a state as to be prejudicial to health or a nuisance.

மற்றும்

பிரிவு 42 Every urban local authority shall

(a) cause its local area to be inspected from time to time with a view to ascertain what nuisances exist therein calling for abatement under the powers conferred on such authority by this act.

மேலும்
தென் மண்டல தேசிய பசுமை தீர்ப்பாயத்தில் நடைப்பெற்ற
Solomon Raja vs The District Collector Chingelpet வழக்கில் (வழக்கு எண் Original Application No.134 of 2021 (SZ) & I.A. Nos.130 & 157 of 2022 (SZ))

In view of the above, this Original Application (O.A. No. 134 of 2021 (SZ) is disposed of with the following directions:-

(I) The Tambaram City Municipal Corporation to ensure that the sewage generated from the areas within their control including the Mummoorthy Nagar etc. are not mixed with the storm water drain.
(III) The Tambaram City Municipal Corportion to comply with the directions issued by the Tamil Nadu Pollution Control Board vide Proceedings dated 18.06.2021.

The Tamil Nadu Pollution Control Board also had issued direction on 15.09.2021 under Section 33A of the Water (Prevention and Control of Pollution) Act, 1974 to the Commissioner-Tambaram City Municipal Corporation to comply with the following conditions within three months:-

(i) The Tambaram Corporation shall identify and plug the discharge of sewage and sullage generated from their local body area into the storm water drains.

**10.** மும்மூர்த்தி நகர் வழியாக வீரராகவன் ஏரியில் கலந்திடும் மழைநீர் வடிகால்வாய்களை கழிவுநீர் கலந்திடாதபடி கண்காணித்து மழைநீர் வடிகால்வாயை சுத்தம் செய்து அதில் மீண்டும் கழிவுநீர் கலந்திடாபடி வீடுகளிலிருந்து வெளியேறும் கழிவுநீர் பாதைகளை அடைத்து, மழைநீர் வடிகாலுக்கு மேலாக சிமெண்ட் மூடிப்போட்டு மூடி பாதுகாத்திட தீர்ப்பு வழங்கப்பட்டிருந்தும்.
(இது முடிவடைந்துவிட்ட வழக்கு என்பது இங்கே குறிப்பிடத்தக்கது. இது தொடர்பில் வேறு வழக்குகள் எந்த நீதிமன்றத்திலும் தீர்ப்பாயத்திலும் நிலுவையில் இல்லை.)

**11.** கழிவுநீர் கால்வாயாக மாறி, கொசுக்கள் மற்றும் எலிகள் பெருக்க கூடாராமாக செயல்பட்டு பொது சுகாதாரத்திற்கு கேடு விளைவித்து வரும் மும்மூர்த்தி நகர் 5–வது மற்றும் 4–வது தெருக்களில் அமைந்திருக்கும் மழைநீர் வடிகால் வாயை முற்றிலும் சுத்தம் செய்து அதில் மீண்டும் கழிவுகள் கலக்கா வண்ணம் மூடிப்போட்டு மூடி பாதுகாப்பு செய்திடாமல் அலட்சிய போக்குடனேயே செயல்பட்டு வருகிறது தாம்பரம் மாநகராட்சியின் மண்டலம்–2 அலுவலகம்.

**12.** மும்மூர்த்தி நகர் 5–வது மற்றும் 4–வது தெருக்களில் அமைந்திருக்கும் மழைநீர் வடிகால்வாயை முற்றிலும் சுத்தம் செய்து அதில் மீண்டும் கழிவுகள் கலக்காவண்ணம் மூடிப்போட்டு மூடி பாதுகாப்பு செய்திடக் கோரி பலமுறை தாம்பரம் மாநகராட்சியின் மண்டலம்–2 அலுவலகத்தில் புகார் அளித்தும்

இதுவரையில் எத்தகைய நடவடிக்கையும் தொடர்புடைய தாம்பரம் மாநகராட்சியின் மண்டலம்–2 அலுவலர்களால் மேற்கொள்ளப்படவேயில்லை.

13. இது தொடர்பில் தேசிய பசுமை தீர்ப்பாயத்தின் தீர்ப்பு, தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியத்தின் பரிந்துரை என்று எதையும் தொடர்புடைய தாம்பரம் மாநகராட்சியின் மண்டலம்–2 அலுவலர்கள் கண்டு கொள்ளாமல் அலட்சியப் போக்குடனேயே செயல்பட்டு வருகிறார்கள்.

14. தாம்பரம் மாநகராட்சியின் மண்டலம்–2 அலுவலர்களுடைய அலட்சியப்போக்கின் உச்சமாக கழிவுநீர் கால்வாயாக மாறிவிட்ட மழைநீர் வடிகால்வாயை சுத்தம் செய்து, அதில் கழிவு நீர் கலந்திடா வண்ணம் அடைப்புகளை ஏற்படுத்தி அதன் மீது சிமெண்ட் மூடிப்போட்டு மூடி பாதுகாத்திட வேண்டியது யாருடைய பொறுப்பு என்கிற தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005–ன் கீழான மனுவிற்கு ந.க. எண் 3662/2024/இ1 நாள் 01.10.2024 கடிதத்தின் வழி அலட்சியப் போக்குடன் கூடிய பொறுப்பற்ற பதிலை பொறுப்பை தட்டிக் கழிக்கும் விதமாக வழங்கியிருக்கிறார் தாம்பரம் மாநகராட்சி மண்டலம்–2, பொதுத் தகவல் அலுவலர்.

கொசுக்கள் மற்றும் எலிகள் பெருக்க கூடாராமாக செயல்பட்டு பொது சுகாதாரத்திற்கு கேடு விளைவித்து வரும் மும்மூர்த்தி நகர் 5–வது மற்றும் 4–வது தெருக்களின் அமைந்திருக்கும் மழைநீர் (கழிவுநீர்) வடிகால்வாயாக இருந்துவரும் கால்வாயால் மும்மூர்த்தி நகரை சேர்ந்த பொதுமக்களுக்கு உயிருக்கு ஆபத்தான சுகாதார கேடு ஏதும் ஏற்பட்டு அதனால் உயிரிழப்புகள் ஏற்படுமாயின் அதற்கான முழு பொறுப்பும் தொடர்புடைய தாம்பரம் மாநகராட்சியின் மண்டலம்–2 அலுவலக அதிகாரிகள் மற்றும் அலுவலர்களையே சேரும்.

BNS சட்டம் பிரிவு 106–ன்படி அலட்சியத்தினால் மரணம் விளைவித்தல் என்பதன் கீழ் தொடர்புடைய தாம்பரம் மாநகராட்சியின் மண்டலம்–2 அலுவலக அதிகாரிகள் மீது சட்ட நடவடிக்கை மேற்கொள்ள அனைத்து சட்ட முகாந்திரங்களும் உள்ளது என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

ஆகவே கொசுக்கள் மற்றும் எலிகள் பெருக்க கூடாராமாக செயல்பட்டு பொது சுகாதாரத்திற்கு கேடு விளைவித்து வரும் மும்மூர்த்தி நகர் 5–வது மற்றும் 4–வது தெருக்களில் அமைந்திருக்கும் மழைநீர் (கழிவுநீர்) வடிகால்வாயை முற்றிலும் சுத்தம் செய்து அதில் வீடுகளில் இருந்து வெளியேறும் கழிவுநீர் கலந்திடா வண்ணம் அடைப்புகளை ஏற்படுத்துவதுடன் மழைநீர் வடிகால்வாயின் மீது சிமெண்ட் மூடிப்போட்டு மூடி கொசு மற்றும் எலிகள் தொல்லைக்கு நிரந்திர தீர்வு ஏற்படுத்திடும்படி தங்களை மும்மூர்த்தி நகர் வீட்டு உரிமையாளர்கள் சங்கம் சார்பில் பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.'' எனத் தெரிவித்துள்ளார்.

2. மனுதாரர் மனு மீதான அறிக்கையை அனுப்புமாறு இம்முறைமன்ற நடுவ 27.03.2025 நாளிட்ட அறிவிப்பு மூலம் தாம்பரம் மாநகராட்சி ஆணையரிடம் கோரப்பட்டது.

3. எதிர்மனுதாரர் தாம்பரம் மாநகராட்சி மண்டலம் 2–ன் உதவி ஆணையாளர் தனது 21.04.2025 நாளிட்ட கடிதம் ந.க.எண்.1640/2025/இ1–ல் கீழ்க்கண்டவாறு அறிக்கை சமர்ப்பித்துள்ளார்:

"தாம்பரம் மாநகராட்சி மண்டலம்–II–ல் வார்டு எண் 28ல் அமைந்துள்ள மும்மூர்த்தி நகர் பகுதியில் 15 ஆண்டுகளுக்கு முன்பு மழைநீர்வடிகால்வாய் அமைக்கப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகிறது. மேலும், இக்கால்வாய் திறந்தவெளிக் கால்வாயாக உள்ளது.

இக்கால்வாயின் உள்ளளவு 2 அடி அகலம் மற்றும் 2 அடி உயரம் கொண்டதாகும். மழைநீர் செல்வதற்கு ஏற்ப அமைக்கப்பட்ட அக்கால்வாயில் மழைக்காலங்களில் இருந்து வரும் மழைநீர் இப்பகுதிகளில் உள்ள கால்வாய் வழியாக வீரராகவன் ஏரிக்கு சென்றடைகிறது. அச்சமயத்தில் கழிவு, கசடு மற்றும் Silt மழைநீர் வடிகாலில் சேர்ந்து அடைப்பு ஏற்படும் பட்சத்தில் பணியாளர்களை கொண்டு அவ்வப்போது சுத்தம் செய்யப்படும். இந்நிலையில் மனுதாரர் மேற்படி அக்கால்வாயில் நிரந்தரமாக மூடி அமைத்து தருமாறு கோரிக்கை வைத்துள்ளனர். மேற்படி மனுதாரர் அவர்களின் கோரிக்கைக்கு ஏற்ப கால்வாயினை நிரந்தரமாக மூடிவிட்டால் மழைக்காலங்களில் அடைப்பு ஏற்படும் பட்சத்தில் அடைப்பினை நீக்கம் செய்ய இயலாது என்று மனுதாரருக்கு நேரடியாக தெரிவிக்கப்பட்டது.

இந்நிலையில் தொடர்ந்து மேல்மூடி அமைக்க வலியுறுத்தியதன் காரணமாகவும், அச்சாலையில் உள்ள பொதுமக்களின் சார்பாகவும், மூடி அமைத்து தர கோரியுள்ளதன்படி, நிரந்தரமாக மேல்மூடி அமைக்காமல் அவ்வப்போது சுத்தம் செய்வதற்கு ஏற்றவாறு Precast Slab மூலம் கால்வாயினை மூட முடிவு செய்யப்பட்டு, அதற்குண்டான மதிப்பீடு தயார் செய்து தொகை ரூ.8.50 இலட்சத்திற்கு மாமன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்பட்டுள்ளது. மேலும், மாமன்றத்தின் அனுமதி பெற்ற உடன் ஒப்பந்தம் கோரி நடவடிக்கை தொடரப்படும் என்ற விவரத்தினை தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

மண்டலம்–Iக்குட்பட்ட வீரராகவன் ஏரியில், மண்டலம்–Iக்குட்பட்ட வார்டு எண் 29, 30 மண்டலம்–II-க்கு உட்பட்ட வார்டு எண் 28ல் உள்ள மழைநீர்வடிகால்வாய் வழியாக செல்லும் Graywater-யினை Intersection and diversion வடிகால் அமைத்து, ஒரே இடத்தில் சேகரித்து, அவ்விடத்தில் சுத்திகரிப்பு நிலையம் அமைத்து அதன் மூலம் சுத்திகரிப்பு செய்து ஏரியில் விடவும், மற்றும் ஏரியினை புனரமைக்கவும் அதற்குண்டான திட்டப் பிரேரணை தயார் செய்து, மதிப்பீடுத் தொகை ரூ.600.00 இலட்சத்திற்கு ந.க. எண் 403/2024/இ1 நாள் 19.06.2024ன்படி, நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களுக்கு நிர்வாக அனுமதி கோரி அனுப்பப்பட்டு நடவடிக்கையில் உள்ளது.

மேலும், வார்டு 28ல் அமைந்துள்ள தெருக்களில் மழைநீர் கால்வாய் பொது சுகாதாரப் பிரிவின் மூலம் தூய்மைப் பணியாளர்களை (கால்வாய் தள்ளும் பணியாளர்கள்) கொண்டு சுத்தம் செய்வது மட்டுமின்றி தினசரி சுத்தம் செய்யப்பட்டு துப்புரவு மேற்பார்வையாளரை கொண்டு மேற்பார்வை செய்யப்பட்டு வருகிறது.

மேற்படி பகுதியில் சுழற்சி முறையில் கொசுக்கள், முதிர்ந்த கொசுக்களை ஒழிக்க புகை மருந்தும், கொசுப்புழுக்களை அழிக்க Spray மருந்து போன்றவை தெளிக்கப்பட்டு தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருகிறது என்ற விவரத்தினை பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.'' எனத் தெரிவித்துள்ளார்.

4. இம்மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் 17.11.2025 அன்று நடைபெறும் நேரடி விசாரணைக்கு ஆஜராகுமாறு 06.11.2025 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5. மனுதாரர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் 17.11.2025 அன்று நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:–

"செங்கல்பட்டு மாவட்டம், தாம்பரம் மாநகராட்சி, மண்டலம்–2, வார்டு 28–ல் அமைந்திருக்கும் மும்மூர்த்தி நகர் 5–வது மற்றும் 4–வது தெருக்களில் சுமார் 15 வருடங்களுக்கு முன்பாக மழைநீர் வடிய, மழைநீர் வடிகால்வாய் கட்டப்பட்ட இந்த

கால்வாயில் கழிவுகள் கலந்திடாதபடி இந்த கால்வாயை மூடிப்போட்டு மூடும் பணியையும் இது வரை தாம்பரம் மாநகராட்சியால் மேற்கொள்ளப்படவில்லை.

2. மேலும் மேற்கண்ட மழைநீர் கால்வாயில் உணவு கழிவுகள் கொட்டப்பட்டு அதனால், கொசு தொல்லை மற்றும் எலித் தொல்லை அதிகமாகி பொதுமக்கள் பெரும் அவதிக்குள்ளாகிறார்கள்.

3. இது தொடர்பாக பலமுறை தாம்பரம் மாநகராட்சி அலுவலகத்திலும் தாம்பரம் மாநகராட்சி மண்டலம்–2 அலுவலகத்திலும் புகார் அளித்தும் எவ்வித நடவடிக்கையும் உரிய மாநகராட்சி அதிகாரிகளால் மேற்கொள்ளப்படவேயில்லை இது குறித்து தகவல் அறியும் சட்டத்தில் மனு அளித்தும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

4. மழைநீர் வடிய கட்டப்பட்ட கால்வாயை கழிவுநீர் கலந்திடாதபடி பாதுகாக்கும் வகையில் மூடிப்போட்டு தரவேண்டிய பொறுப்பு மாநகராட்சிக்கு இல்லை என்று தாம்பரம் மாநகராட்சியில் பதில் அளிக்கப்பட்டுள்ளது.

மேலும், தென் மண்டல தேசிய பசுமை தீர்ப்பாயத்தில் வழக்கு எண்.134 of 2021ல் அளிக்கப்பட்ட தீர்ப்பில் ஒன்றானது "Tambaram Corporation Cell identify and plug the discharge of Sewage and sullage Generated from their Local Body Area into the Storm Water drains". இதன்படியும் தாம்பரம் மாநகராட்சி நடவடிக்கை எடுக்கவில்லை.

5. எங்கள் நல சங்கத்தின் மூலம் பொதுமக்களுக்கு மேற்கண்ட மழைநீர் வடிகால்வாயில் குப்பை கொட்டுவது கழிவு நீர் கலப்பது குறித்து அவ்வப்போது விழிப்புணர்வு ஏற்படுத்தி வருகிறோம். இருப்பினும்:–

1) மூன்று மாதத்திற்கு ஒரு முறை மாநகராட்சி அலுவலர்களால் கள ஆய்வு மேற்கொள்ளப்பட்டு மழைநீர் கால்வாய்களில் குப்பை கொட்டுவோர், கழிவு நீரை கலப்போர் ஆகியோருக்கு தக்க அறிவுரை வழங்கவும் மீறுவோர் மீது சட்டப்பூர்வமான தாக்கீதுகள் வழங்கவும்,

2) மாதத்திற்கு ஒரு முறை மேற்கண்ட மழைநீர் கால்வாய்களில் தேங்கும் குப்பைகள் மற்றும் கழிவு நீரை அகற்றி பராமரிக்கவும்,

3) எங்கள் பகுதிக்கு அருகில் உள்ள நியூ காலனியில் அமைக்கப்பட்டுள்ள மழைநீர் வடிகால்வாயில் முறையாக மூடி போடப்பட்டு தாம்பரம் மாநகராட்சியால் பராமரிக்கப்படுகிறது அது போல எங்கள் பகுதியில் உள்ள மழைநீர் வடிகால்வாய்க்கும் மூடி போட்டு பராமரிக்கவும்,

தாம்பரம் மாநகராட்சி ஆணையருக்கு உரிய உத்தரவினை பிறப்பிக்குமாறு இம்முறைமன்ற நடுவர் அவர்களை பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.''

6. எதிர்மனுதாரர் தரப்பில் தாம்பரம் மாநகராட்சி மண்டலம்–2–ன் உதவி செயற்பொறியாளர் 17.11.2025 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:–

"தாம்பரம் மாநகராட்சி மண்டலம்–II–ல் வார்டு எண் 28ல் அமைந்துள்ள மும்மூர்த்தி நகர் பகுதியில் 15 ஆண்டுகளுக்கு முன்பு மழைநீர்வடிகால்வாய் அமைக்கப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகிறது. மேலும், இக்கால்வாய் திறந்தவெளிக் கால்வாயாக உள்ளது. இக்கால்வாயின் உள்ளளவு 2 அடி அகலம் மற்றும் 2 அடி உயரம் கொண்டதாகும். மழைநீர்

செல்வதற்கு ஏற்ப அமைக்கப்பட்ட அக்கால்வாயில் மழைக்காலங்களில் இருந்து வரும் மழைநீர் இப்பகுதிகளில் உள்ள கால்வாய் வழியாக வீரராகவன் ஏரிக்கு சென்றடைகிறது. அச்சமயத்தில் கழிவு, கசடு மற்றும் Silt மழைநீர் வடிகாலில் சேர்ந்து அடைப்பு ஏற்படும் போது பணியாளர்களை கொண்டு அவ்வப்போது சுத்தம் செய்யப்படும்.

மனுதாரர் தெரிவித்த நியூ காலனியில் உள்ள மழைநீர் வடிகாலின் உயரம் 1.5 மீட்டர் மற்றும் 1.5 மீட்டர் அகலம் கொண்டதாகும். அதனால் அதனை சுத்தம் செய்வது எளிது. ஆனால் மும்மூர்த்தி நகர் 4 மற்றும் 5வது தெருவில் உள்ள மழைநீர் வடிகால் 2 அடி அகலம், 2அடி உயரம் கொண்டதால் அதனை சுத்தம் செய்ய இயலாது.

இந்நிலையில் தொடர்ந்து மேல்மூடி அமைக்க வலியுறுத்தியதன் காரணமாகவும், அச்சாலையில் உள்ள பொதுமக்களின் சார்பாகவும், மூடி அமைத்து தர கோரியுள்ளதன்படி, நிரந்தரமாக மேல்மூடி அமைக்காமல் அவ்வப்போது சுத்தம் செய்வதற்கு ஏற்றவாறு Precast Slab மூலம் கால்வாயினை மூட முடிவு செய்யப்பட்டு, அதற்குண்டான மதிப்பீடு தயார் செய்து தொகை ரூ.8.50 இலட்சத்திற்கு மழைநீர் வடிகால்வாய்க்கு மூடி அமைக்கும் பணிக்கு இரு முறை ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டும் யாரும் ஒப்பந்தப்புள்ளியில் கலந்துக் கொள்ளாததால் மூன்றாவது முறை ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த திரு.வி.குமார் என்ற ஒப்பந்ததாரருக்கு 30.07.2025 அன்று பணி உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

தற்போது அப்பணி ஒப்பந்ததாரால் பணி துவங்கப்பட்டு நடைப்பெற்று வருகிறது. 2025 டிசம்பர் மாதத்திற்குள் இப்பணி முடிக்க உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

கொசு ஒழிப்பு தொடர்பாக தாம்பரம் மாநகராட்சி சுகாதார துறையால் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்று இம்முறைமன்ற நடுவர் அவர்களுக்கு தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும் மழைநீர் வடிகால்வாயின் மீது Precast Slab அமைக்கும் பணியின் புகைப்பட நகலினை இம்முறைமன்ற நடுவர் அவர்களுக்கு சமர்ப்பிக்கிறேன். ".

7. முறையீட்டு மனுதாரரின் புகார் மனு, வாக்குமூலம், எதிர்மனுதாரரான தாம்பரம் மாநகராட்சி மண்டலம் 2–ன் உதவி ஆணையாளரின் அறிக்கை, உதவி செயற்பொறியாளரின் வாக்குமூலம் மற்றும் புகைப்படங்கள் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:

செங்கல்பட்டு மாவட்டம், தாம்பரம் மாநகராட்சி, மண்டலம்–2, வார்டு 28–ல் அமைந்திருக்கும் மும்மூர்த்தி நகர் 5–வது மற்றும் 4–வது தெருக்களில் சுமார் 15 வருடங்களுக்கு முன்பாக மழைநீர் வடிய, தாம்பரம் மாநகராட்சியால் கட்டப்பட்ட மழைநீர் கால்வாயில், கழிவுகள் கலந்திடாதபடி அக்கால்வாயின் மீது மூடிப் போடாததால், மேற்கண்ட மழைநீர் கால்வாயில் உணவு கழிவுகள் கொட்டப்படுவதினால், கொசு தொல்லை மற்றும் எலித் தொல்லை அதிகமாகி பொதுமக்கள் பெரும் அவதிக்குள்ளாகிறார்கள் என்பதும், இது தொடர்பாக தென் மண்டல தேசிய பசுமை தீர்ப்பாயத்தில் வழக்கு எண்.134 of 2021ல் அளிக்கப்பட்ட தீர்ப்பின்படி தாம்பரம் மாநகராட்சி நடவடிக்கை எடுக்கவில்லை என்பதும், மனுதாரரின் குடியிருப்பு நல சங்கத்தின் மூலம் பொதுமக்களுக்கு மேற்கண்ட மழைநீர் வடிகால்வாயில் குப்பை கொட்டுவது கழிவு நீர் கலப்பது குறித்து அவ்வப்போது விழிப்புணர்வு ஏற்படுத்தியிருந்தாலும், மூன்று மாதத்திற்கு ஒரு முறை மாநகராட்சி அலுவலர்களால் கள ஆய்வு மேற்கொள்ளப்பட்டு மழைநீர் கால்வாய்களில் குப்பை கொட்டுவோர், கழிவு நீரை கலப்போர் ஆகியோருக்கு தக்க அறிவுரை வழங்கவும், மீறுவோர்களின் மீது சட்டப்பூர்வமான தாக்கீதுகள் வழங்கவும், மாதத்திற்கு ஒரு முறை

மேற்கண்ட மழைநீர் கால்வாய்களில் தேங்கும் குப்பைகள் மற்றும் கழிவு நீரை அகற்றி பராமரிக்கவும், மனுதாரரின் பகுதிக்கு .அருகில் உள்ள நியூ காலனியில் அமைக்கப்பட்டுள்ள மழைநீர் வடிகால்வாயில் முறையாக மூடி போடப்பட்டு தாம்பரம் மாநகராட்சியால் பராமரிக்கப்படுவது போல மனுதாரரின் பகுதியில் அமைக்கப்பட்ட மழைநீர் வடிகால்வாய்க்கும் மூடி போட்டு பராமரிக்கவும் கோரியிருப்பது மனுதாரரின் மனு மற்றும் வாக்குமூலத்தின் வாயிலாக அறிய முடிகிறது.

தாம்பரம் மாநகராட்சி மண்டலம்–II–ல் வார்டு எண் 28ல் அமைந்துள்ள மும்மூர்த்தி நகர் பகுதியில் 15 ஆண்டுகளுக்கு முன்பு அமைக்கப்பட்ட மழைநீர்வடிகால்வாய் திறந்தவெளிக் கால்வாயாக உள்ளது என்பதும், உள்ளளவு 2 அடி அகலம் மற்றும் 2 அடி உயரம் கொண்ட மழைநீர் செல்வதற்கு ஏற்ப அமைக்கப்பட்ட இக்கால்வாயில் மழைக்காலங்களில் வரும் மழைநீர் இப்பகுதிகளில் உள்ள கால்வாய் வழியாக வீராகவன் ஏரிக்கு செல்லும் சமயத்தில் கழிவு, கசடு மற்றும் Silt மழைநீர் வடிகாலில் சேர்ந்து அடைப்பு ஏற்படும் போது பணியாளர்களை கொண்டு அவ்வப்போது சுத்தம் செய்யப்படும் என்பதும், மனுதாரர் தெரிவித்த தாம்பரம் மாநகராட்சியில் நியூ காலனியில் உள்ள மழைநீர் வடிகாலின் உயரம் 1.5 மீட்டர் மற்றும் 1.5 மீட்டர் அகலம் உள்ளதால், அவற்றில் ஏற்படும் கழிவுகளை சுத்தம் செய்வது எளிது என்பதும், ஆனால் மும்மூர்த்தி நகர் 4 மற்றும் 5வது தெருவில் உள்ள மழைநீர் வடிகால் 2 அடி அகலம், 2 அடி உயரம் கொண்டதால் அதனை சுத்தம் செய்ய இயலாது என்பதும், இந்நிலையில் தொடர்ந்து மேல்மூடி அமைக்க வலியுறுத்தியதன் காரணமாகவும், அச்சாலையில் உள்ள பொதுமக்களின் சார்பாகவும், மூடி அமைத்து தர கோரியுள்ளதன்படி, நிரந்தரமாக மேல்மூடி அமைக்காமல் அவ்வப்போது சுத்தம் செய்வதற்கு ஏற்றவாறு Precast Slab மூலம் கால்வாயினை மூட முடிவு செய்யப்பட்டு, அதற்குண்டான மதிப்பீடு தயார் செய்து தொகை ரூ.8.50 இலட்சத்திற்கு மழைநீர் வடிகால்வாய்க்கு மூடி அமைக்கும் பணிக்கு இரு முறை ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டும் யாரும் ஒப்பந்தப்புள்ளியில் கலந்துக் கொள்ளாததால், மூன்றாவது முறை ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த திரு.வி.குமார் என்ற ஒப்பந்ததாரருக்கு 30.07.2025 அன்று பணி உத்தரவு வழங்கப்பட்டுள்ளது என்பதும், தற்போது அப்பணி ஒப்பந்ததாரரால் பணி துவங்கப்பட்டு நடைப்பெற்று வருகிறது என்பதும், 2025 டிசம்பர் மாதத்திற்குள் இப்பணி முடிக்க உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதும், கொசு ஒழிப்பு தொடர்பாக தாம்பரம் மாநகராட்சி சுகாதார துறையால் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்பதும், எதிர்மனுதாரரான தாம்பரம் மாநகராட்சி மண்டலம் 2–ன் உதவி ஆணையாளரின் அறிக்கை மற்றும் உதவி செயற்பொறியாளரின் வாக்குமூலம் மற்றும் அவர் சமர்ப்பித்த புகைப்பட நகல் ஆகியவற்றின் வாயிலாக அறிய முடிகிறது.

இந்நேர்வில், தாம்பரம் மாநகராட்சி, மண்டலம்–2, வார்டு 28–ல் அமைந்திருக்கும் மும்மூர்த்தி நகர் 5–வது மற்றும் 4–வது தெருக்களில் சுமார் 15 வருடங்களுக்கு முன்பாக மழைநீர் வடிய, கட்டப்பட்ட திறந்தவெளி மழைநீர் கால்வாயின் மேற்புறம் மூடி போட்டு தரும்படி மனுதாரர் கோரியுள்ளதன் அடிப்படையில், நிரந்தரமாக மேல்மூடி அமைக்காமல் அவ்வப்போது சுத்தம் செய்வதற்கு ஏற்றவாறு Precast Slab மூலம் கால்வாயினை மூட முடிவு செய்யப்பட்டு, ரூ.8.50 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கண்ட மழைநீர் வடிகால்வாய்க்கு மூடி அமைக்கும் பணி தற்போது ஒப்பந்ததாரரால் துவங்கப்பட்டு, இப்பணி 2025 டிசம்பர் மாதத்திற்குள் முடிக்க உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்றும், கொசு ஒழிப்பு தொடர்பாக தாம்பரம் மாநகராட்சி சுகாதார துறையால் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்றும், தாம்பரம் மாநகராட்சி மண்டலம் 2–ன் உதவி செயற்பொறியாளரின் வாக்குமூலத்தில் தெரிவித்துள்ள நிலையில், தேசிய பசுமை தீர்ப்பாயம், தெற்கு மண்டலம், சென்னை O.A.134/2021–ல் வழங்கியுள்ள தீர்ப்பினையும் கருத்திற்கொண்டு, மேற்கண்ட பகுதிகளில் அமைக்கப்பட்ட மழைநீர் வடிகால்வாய்க்கு மூடி

போடப்படும் பணியினை டிசம்பர் 2025–க்குள் முடிப்பதற்கும் மற்றும் கொசு ஒழிப்பு தொடர்பாக சுகாதார துறையால் உரிய நடவடிக்கையினை மேற்கொள்ளவும், தாம்பரம் மாநகராட்சி மண்டலம் 2–ன் உதவி ஆணையாளருக்கு அறிவுறுத்துமாறு, தாம்பரம் மாநகராட்சி ஆணையருக்கு பரிந்துரை செய்து இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

2025ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 24–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

(ஒப்பம்)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

(1) திரு. ஜெ. பிரவீன் குமார்,
கதவு எண் 12/94, 5வது தெரு,
மும்மூர்த்தி நகர், குரோம்பேட்டை,
சென்னை–600 044.

(2) ஆணையர்,
தாம்பரம் மாநகராட்சி,
28 முத்துரங்கம் தெரு,
தாம்பரம் மேற்கு,
சென்னை–600 045.

(3) உதவி ஆணையர்,
மண்டலம் 2,
தாம்பரம் மாநகராட்சி,
தாம்பரம்–600 044.

(4) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண் 75 சாந்தோம் நெடுஞ்சாலை
இராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை 600 028.

(5) இணை இயக்குநர்/ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer),
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண் 75 சாந்தோம் நெடுஞ்சாலை,
இராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை 600 028.

<u>நகல்:</u>
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இ.கோ / உதிரி.

//ஆணைப்படி / அனுப்பப்படுகிறது//

செயலாளர்